REGD.No. M. 6311 ★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க.தினஇதழ் ஆசிரியர் இரா.நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: ஆடி 23உ திங்கள் (8—8—55) ★ ★ வெளியூர்: ஆடி 24உ செவ்வாய் (9—8—55) [இதழ் 47

தி. மு. கழகத்திற்கு சொந்த மைதானம்

சென்னை, ஆக. 8—

தி. மு. கழகத்திற்குச் சொந்தமாக சென்னையில் ரூ. 20,000-த்திற்கு மைதானம் ஒன்று விலைக்கு வாங்கப்பட்டுள்ளது. அம்மைதானம், சென்னை-சேத்துப்பட்டு இருப்புப் பாதைக்கு வடக்கிலும், பச்சையப்பன் மாணவர் விடுதிக்கு மேற்கிலும் 19 கிரவுண்ட் 1,215 சதுர அடி பரப்பில் உள்ளது.

இவ்விபரத்தை, நேற்று, திருவல்லிக்கேணி கடற்கரையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் அண்ணா அவர்கள் அறிவித்தார்.

'தென்னகம் தொழில் துறையில் ஒதுக்கப்பட்டுள்ளது'

'வேலையற்றோரை வேறு மாநிலங்களுக்கு வேலை தேட வெளியேற்றக் கூடாது'

'தொழில் வளர்ச்சியில்தான் வேலையற்றோர் பிரச்சினை தீரும்'

'தென்னகத்திற்குச் சலுகை காட்டுமாறு இந்திய அரசாங்கத்திடம் சென்னை உறுதியுடன் போரிட வேண்டும்'

தொழிலதிபர் அனந்தராமகிருஷ்ணன் அவர்களின் ஆணித்தரமான பேச்சு

சென்னை, ஆக. 7—

"தென்னகம் தொழில் துறையில் ஒதுக்கப்பட்டுக் கிடக்கிறது என்பது ஒரு பொதுக் கருத்தாகும்."

"பம்பாயிலும், வங்காளத்திலும் கன ரகத் தொழில்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன; இத்துறையில் தென்னகம் புறக்கணிக்கப்பட்டிருக்கிறது."

"விவசாய முனையைப் பொறுத்தவரையில், விரிவாக்கப்பட வேண்டிய எல்லையை அடைந்துவிட்டது. வேலையற்ற பெரும்பான்மையினருக்கு, இம்முனையில் மேலும் பணியாற்ற வாய்ப்பிருக்கக்கூடும் என நம்புவதற்கில்லை;"

"எனவே, இரண்டாவது திட்டத்தின் மூலக் கோட்பாடான வேலையின்றித் தவிப்போருக்கு வேலை தரும் நோக்கம் நிறைவேறுவது, பெரிதும் தொழில் துறையை விரிவடையச்செய்வதையே பொறுத்திருக்கிறது. அதிக அளவிற்கு, அதி விரைவில் தென்னகத்தைத் தொழில்மயமாக்குவதில் நாம் உறுதிகொள்ளுவோமானல், இங்கு வேலையின்றித் தவிப்போர் அனைவருக்கும் நம்மால் வேலை தர முடியும் என்பதே என் நம்பிக்கை."

இக்கருத்துக்களை, தென்னிந்திய தொழிலதிபர் அனந்தராம கிருஷ்ணன் அறிவித்துள்ளார்.

"இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில், மொத்தத்தில் ஒரு கோடி நபர்களுக்கு வேலை தர வேண்டும் என முடிவு கட்டப்பட்டிருக்கிறது. அதன்படி சென்னை மாநிலத்தில் 15 லட்சம் மக்களுக்கு வேலை தேடித்தந்தாக வேண்டும். அது, தென்னகத்தைத் தொழில்மயமாக்குவதினுல்தான் நிறைவேறக் கூடும்."

"தென்னிந்தியாவில் மொத்தம் 6½ கோடி மக்கள் வதிவதாகக் கணக்கிடப்பட்டிருக்கிறது; அவர்களில் பெருந்தொகையினர் விவசாயத்தில் ஈடுபட்டு இருக்கின்றனர்; அரசாங்கக் கணக்குப்படி ஆண்டு ஒன்றுக்கு 115 நாட்களுக்கு மட்டுமே அவர்கள் வேலையில் ஈடுபடுபவர்களாக உள்ளனர்."

"தொழில் துறைக்கு நாம் 300 கோடி ரூபாய் முதலீடு செய்வதாக இருந்தால், 15 லட்சம் நபர்களுக்கு இல்லையானுலும் பல மக்களுக்கு வேலை தருவது சாத்தியமாகும்."

"ஆனல் சென்னை அரசாங்கமோ 39½ கோடி ரூபாய் திட்டத்தில், தொழில் துறைக்கு 42 கோடி ரூபாயே ஒதுக்கி இருக்கிறது. அதனுல் மேலும் 1,90,000 மக்களுக்கு மட்டுமே வேலை கொடுக்க முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது."

"வேலையற்று இருக்கும் மற்றவர்கள் வேலை தேடி வேறு மாநிலங்களுக்குச் செல்ல வேண்டுமென சென்னை அரசாங்கம் எண்ணுகிறது என என்னுல் கொள்ள முடியவில்லை. 'தங்கள் தங்கள் மக்களுக்கே வேலை தர வேண்டும்,' என மற்ற மாநிலங்கள் மறைமுகமாக கெடுபிடி செய்து வருகின்றன என்பது பொதுக் கருத்தாகும்."

"இங்கு வேலை கிடைக்காது தவிப்பவர்களை, வேலை தேடி வேறு மாநிலங்களுக்குச் செல்லும்படியாக நான் யோசனை கூறத் தயாராக இல்லை; ஏனெனில், தொழில் துறையில் தென்னிந்தியா தாழ்வுற்றுக் கிடப்பதால், ஏற்கனவே பலர் வேலை தேடி வெளி மாநிலங்களுக்குச் சென்றுள்ளனர்."

"மற்றொரு உண்மையும் வேலையற்றோர் பிரச்சினையை தீவிரமாக்கி வருகிறது. அதாவது, அதிகப்படியான பள்ளிகளை அரசாங்கம் துவங்குவதின் விளைவாக, படித்துப் பட்டம் பெறுகிறவர்கள் வேலை தேடி அலையும் நிலைமை உருவாகிறது."

"நாடு முழுதும் சீருடன் இயங்கி வரும் தொழிற்சாலைகள்மீது ஒரு சிறப்பு வரி விதித்து, அத்தொகையை, சென்னை மாநிலம் போன்று தொழில் துறையில் பின்தங்கிக் கிடக்கிற பகுதிகளின் தொழில் வளர்ச்சிக்கு உதவ வேண்டும்."

(தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க)

பாட்டாளிகள் துயர் துடைக்கும் பணியில் தி. மு. க. பங்கின் எதிரொலி

மாநில மாநாட்டிற்கு ரூ. 500 காணிக்கை

பெரம்பூர் இரயில்வே தொழிலாளர்கள் தருவரென கடற்கரை கூட்டத்தில் தலைவர் அறிவிப்பு

சென்னை, ஆக. 8—

பிரம்மாண்டமான அளவில், திருவல்லிக்கேணி கடற்கரையில், நேற்று குழுமியிருந்த மக்களிடையில், தலைமை தாங்கிய தோழர் காஞ்சி-கல்யாணசுந்தரம் அவர்கள் குறிப்பிட்டார்:—

"உழைக்கும் பாட்டாளி மக்களிடையே தி. மு. கழகம் பணியாற்றுகிறதா?—என்று மாற்றுக் கட்சித் தோழர்கள் கேட்கின்றனர்; நாம் பணியாற்றுகிறோமா, இல்லையா என்பதை அத்தோழர்கள் உணருவதற்கு—நாம் பதில் கூறுவிட்டாலும்—பெரம்பூர் இரயில்வே தொழிலாளர்கள் நேர்முகமாகப் பதிலளிக்க முனைந்துள்ளனர்; தி. மு. கழக இரண்டாவது மாநில மாநாட்டிற்கு, செப்டம்பர் மாதத்தில் அண்ணா அவர்களிடம் ரூ. 500 தருவதென அத்தோழர்கள் முடிவெடுத்துள்ளதை இம்மாபெரும் கூட்டத்தில் அறிவிக்குமாறு எனக்குக் கட்டளையிடப்பட்டுள்ளது," என்றார்.

ரூ. 300 கோடி திட்டம் ரூ. 120 கோடியாகிறது!

திரு-கொச்சி முதலமைச்சர் கூறும் சோகக் கதை!

திருவனந்தபுரம், ஆக. 7—

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில், திரு-கொச்சி மாநிலத்திற்கு, ரூ. 120 கோடி பெறுமான திட்டங்கள் சேர்த்துக்கொள்ளப்படுவதற்கு மாநில அமைச்சரவை ஒப்புதல் தந்துள்ளது.

இந்த நகல் திட்டம் முதன் முதலில் ரூ. 300 கோடி செலவுக்குத் தயாரிக்கப்பட்டிருந்ததென்றும், ஆனல், இறுதியில் அந்தத் தொகை ரூ. 120 கோடியாகக் குறைந்துவிட்டதாகவும் முதலமைச்சர் பனம்பள்ளி கோவிந்தமேனன் தெரிவித்திருக்கிறார்.

"எனினும், முக்கியமான திட்டங்கள் எதுவும் விடப்படவில்லை" என்றும் அவர் ஆறுதல் கூறியிருக்கிறார்.

இந்த நகல் திட்டத்தில், மாநிலத்தில், தனியார் துறையில் ஒரு ரப்பர் டயர் உற்பத்தித் தொழிற்சாலையும், மின்சார சாதன உற்பத்திச் சாலையும், கப்பல் கட்டும் தொழிலும் அடங்கியுள்ளனவாம்.

'கல்வி அபிவிருத்தித் திட்டங்களை குறைக்க வேண்டும்!'

கல்வி இலாகா அதிகாரிகள் மாநாட்டில் தீர்மானம்

புதுடில்லி, ஆக. 6—

"கல்வித் துறைக்குக் குறைவான தொகையே கிடைக்குமாகையால், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் கல்வி அபிவிருத்திக்கான திட்டங்களை குறைக்க வேண்டும்,"

என்று, இங்கு நடைபெற்ற மாநில கல்வி இலாகா டைரக்டர்கள், செயலாளர்களடங்கிய மாநாடு ஒன்றில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

கல்வி அபிவிருத்தித் திட்டத்திற்கு எல்லா மாநிலங்களிலுமாக மொத்தம் ரூ. 650 கோடிதான் கிடைக்குமென கூறப்பட்டிருக்கிறது.

'விழிப்படைந்துள்ள மக்கள் மீது ஆதிக்கம் கூடாது'

இனப்போர் மூளுமென நேரு எச்சரிக்கை

சுரண்டலை நிறுத்துமாறு கோரிக்கை

"கடந்த 25-ஆண்டுகாலமாக, இந்திய தேசியக் காங்கிரஸ், அயல் நாடுகளில் வாழும் இந்தியருக்கு முக்கியமாக, ஆப்பிரிக்காவில் வாழும் இந்தியருக்கு, 'ஆப்பிரிக்க மக்களைச் சுரண்டிப் பணம் சம்பாதித்துக்கொண்டிருந்தால், அவர்கள், இந்தியாவின் உதவியை எதிர்பார்க்க முடியாது' என்று இடித்துரைத்து வந்திருக்கிறது.

"ஆப்பிரிக்க மக்களின் நல்லெண்ணத்தையும், அன்பையும் பெற்றிருக்கும் வகையில்தான் இந்தியர்கள் அங்கு இருக்க முடியும்; வியாபாரத்திலோ, மற்ற துறைகளிலோ ஆப்பிரிக்க மக்களை இந்தியர் சுரண்டுவதற்கு அனுமதிக்க முடியாது; ஏனெனில், ஐரோப்பிய ஏகாதிபத்திய நாடுகள், ஆப்பிரிக்காவிலும், மற்ற இடங்களிலும் இதைத்தான் முதலில் ஆரம்பித்தனர்;

"ஆப்பிரிக்க மக்களின் உள்ளத்தை மாத்திரம் அறிந்துகொண்டால் போதாது; அவர்களுடைய இதயத்தையும் அறிந்துகொள்ள வேண்டியது அவசியம்; தற்போது ஆப்பிரிக்கா முழுவதிலுமே எழுச்சி ஏற்பட்டிருக்கிறது என்

(4-ம் பக்கம் பார்க்க)

தமிழ் நிலத்தில் குஜராத்தியர் மொழிவெறிக் கூத்து!

குஜராத்தியை போதனு மொழியாக கொண்டு ஒரு உயர்நிலைப் பள்ளி!

"குஜராத்தி சிறுர்களின் நலன் கருதி, குஜராத்தியை போதனு மொழியாகக் கொண்ட ஒரு உயர்நிலைப் பள்ளியைக் குஜராத்திகள் துவங்கவேண்டும்,"

—இவ்வாறு கல்யாண்ஜி என்ற குஜராத்தி முக்கியஸ்தர் கோரியுள்ளார்.

குஜராத்தி பால் மாந்திர், குஜராத்தி வித்தியா மாந்திர் ஆகிய சங்கங்களின் ஆண்டுவிழா அண்ணாமலை மன்றத்தில் கொண்டாடப்பட்டது அந்த விழா கூட்டத்தில் தலைமை வகித்த கல்யாண்ஜிதான் மேற்குறிப்பிட்டுள்ள கோரிக்கையை, கூட்டத்திற்கு வந்திருந்த குஜராத்திகளிடம் வெளியிட்டுள்ளார்.

மேற்படி இரண்டு மாந்திர்களுக்கும், சொந்தக் கட்டடம் கட்டுவதற்காக ரூ. 51,000 நன்கொடையாகக் கொடுத்த சுகுலால் பாயிக்கு, கூட்டத் தலைவர் நன்றியறிவித்தார் தனித் தனியாக இயங்கிவரும் குஜராத்தி கல்வி நிலையங்களை, ஒரு மத்திய கல்விக் குழுவின் கீழ் கொண்டுவரவேண்டும் எனவும் தலைவர் கூறியுள்ளார்.

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 8—8—'55 திங்கள்

என்ன சமாதானம் கூறப் போகிறார்கள்?

என்றென்றும் 'இந்தி' என்ற ஒரு சொல்லைக் கேட்டறியாதவர்கள்கூட, அச்சொல்லைப் புதிதாகக் கேட்டிடும் ஒரு சூழ்நிலை இப்பொழுது ஏற்பட்டிருக்கிறது. அப்புதிய சூழ்நிலையை இந்தி ஆதரவாளர்களும், அதே அளவில் அம்மொழி எதிர்ப்பாளர்களும் உருவாக்கி வருகின்றனர்.

இந்தியத் துணைக்கண்டத்தில் வழங்கப்பட்டு வரும் நூற்றுக்கணக்கான மொழிகளில் இந்தி உள்ளிட்ட பதினான்கு மொழிகளை மட்டும் 'தேசிய மொழிகள்' என ஏற்றுக்கொண்டு, மற்ற மொழிகளை ஒதுக்கித் தள்ளிவிட்டனர் அரசியல் சட்டமியற்றினவர்கள். இந்தி உள்ளிட்ட பதினான்கு மொழிகளை 'தேசிய மொழிகள்' என இந்திய அரசியல் சட்டம் ஒப்புக்கொண்டபோதிலும், இந்தியத் துணைக்கண்டம் முழுதிலும் மிகக் கம்பீரமாக உலாவிவரும் வாய்ப்பு இந்தி மொழிக்கு மட்டுமே, அரசியல் சட்டத்தின் மூலம் தரப்பட்டிருக்கிறது. 'மற்ற தேசிய மொழிகள் ஒவ்வொன்றினையும் பேசும் மக்கள் தொகையைக் காட்டிலும் அதிகமான மக்கள் தொகையினர் இந்தி மொழியைப் பேசி வருகின்றனர்,' எனக் காரணம் கூறி, மற்ற தேசிய மொழிகளுக்கு இல்லாத ஒரு பெரும் பேற்றினை, அந்த இந்திக்குத் தரப்பட்டிருக்கிறது.

அதாவது, ஆந்திரம், தமிழ், வங்கம் போன்ற பதினான்கு மொழிகள் இந்தியைப் போன்றே, 'தேசிய மொழிகள்' என அரசியல் சட்டம் ஒப்புக்கொண்டிருந்தபோதிலும், இந்தியத் துணைக்கண்டம் முழுதிலும் அதிகாரம் செலுத்த இந்தி மொழிக்குள்ள உரிமை அளவு, ஒப்புக்கொள்ளப்பட்டுள்ள மற்ற மொழிகளுக்கு அறவே கிடையாது. குறிப்பிட்ட ஒரு எல்லை அளவுக்குள்ளாகவேதான், மற்ற 'தேசிய மொழிகள்' தங்கள் தங்கள் ஆட்சியைச் செலுத்த முடியும். ஆனால், மொத்தம் 'தேசிய மொழிகள்' பதினான்கில் ஒன்றுதான் இந்தி மொழி எனக் கொள்ளப்பட்டிருந்தபோதிலும், அந்த இந்தி மொழி நாடு முழுவதிலும் ஆட்சி செலுத்த உரிமை பெற்று இருக்கிறது.

தமிழ் மொழி, தமிழ்நாட்டு எல்லை அளவுடன் நிற்கவேண்டியதுதான். அதுபோன்றே ஆந்திரமும், அதன் நிலப்பரப்புடன் திருப்தியடையவேண்டியதுதான். ஆனால் இந்தியோ, ஆந்திரத்திலும் அதிகார ஆணவத்துடனே அல்லது சோதர வேடத்துடனே நுழையலாம் — நுழைந்து ஆதிக்கமும் செலுத்தலாம். தமிழ் நாட்டிலும் இந்திக்கு அந்த உரிமை உண்டு.

இந்தி, தமிழ், ஆந்திரம் ஆகிய மொழிகள் 'தேசிய மொழிகள்' என அரசியல் சட்டம் கூறுகிறது. ஒரு சொல்லால்தான், மேற்குறிப்பிட்டுள்ள உண்மை ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது.

ஆனால், அந்த ஒரு சொல்லே, இந்தி மொழி விஷயத்தில் ஒரு மாதிரியாகவும், தமிழ், ஆந்திரம் ஆகிய மொழிகள் விஷயத்தில் வேறுமாதிரியாகவும், செயலளவில் பொருள்படுவதாக இருக்கிறது.

'தேசிய மொழி' என்ற சொல்லை இந்தியுடன் இணைக்கும்பொழுது, தெற்கே குமரிமுனை வரையிலும், வடக்கே லடாக் வரையிலும் ஆதிக்கம் செலுத்தும் உரிமை இந்தி மொழிக்கு இருக்கிறது எனப் பொருள் கொடுக்கிறது. அதே 'தேசிய மொழி' என்ற சொற்றொடரை 'தமிழ்' மொழியுடன் தொடர்புபடுத்தும்பொழுது, 'தமிழ் வழங்கப்படும் நிலப்பரப்பிற்குள்ளாக மட்டுந்தான் ஆட்சி செலுத்தும் உரிமை தமிழுக்குண்டு' எனும் பொருளைக் கொடுக்கிறது.

இந்தியத் துணைக்கண்டம் முழுதிலும் ஆதிக்கம் பெறும் உரிமை, ஒப்புக்கொள்ளப்பட்டுள்ள மற்ற 'தேசிய மொழி'களுக்கு இல்லாது இருக்கும் நிலையில், இந்திக்கு மட்டும் இருக்கிறது என்பதுடன் விஷயம் முடிந்துவிடவில்லை; அது, மேலும் விரிவடைந்து செல்லுகிறது.

அரேபியாலும் இந்தி முழங்கும்; அமெரிக்காவிலும் இந்தி ஒலிக்கும்; மாஸ்கோவிலும் இந்தி இசைக்கும்; சீனத்திலும் இந்தி எக்காளமிடும்; அடுக்கிக்கொண்டே போவானேன்? உலகம் முழுதிலும் இனி இந்தி சதிராடும்!

உலகத்தில் சதிராடும் வாய்ப்புப் பெறும் இந்தி மொழியும், இந்தியத் துணைக்கண்டத்தின் தேசிய மொழிதான்! அதேபோன்று, தமிழும் ஆந்திரமும் இந்தியத் துணைக்கண்டத்தின் தேசிய மொழிகள்தான். இந்த மூன்றையும் ஒரே அரசியல் சட்டந்தான் 'தேசிய மொழிகள்' என்ற ஒருசொல்லால் ஒப்புக்கொண்டு இருக்கிறது!

தமிழ் தோளில் இந்தி சவாரி செய்யும்! ஆந்திரத்தின் முதுகில் இந்தி குதிரை ஏறும்! ஆனால் இந்தியோ, மற்ற தேசிய மொழிகளுக்கு வளைந்தும் கொடுக்காது—குனிந்தும் கொடுக்காது!

அதே நேரத்தில் உலக நாடுகளின் தலைநகரங்களில் கொடிகட்டி செங்கோலோச்சும்!

பார்ப்பனனும் இந்துதான்! அவனுக்குப் பல்லக்குத் தூக்கித் திரியும் மற்றவர்களும் இந்துக்கள்தான்!

ஆனால் செயல் முறையில் இந்து மதம், பார்ப்பனனுக்கு உயர்வையும், மற்றவர்களுக்கு இழிவையும் தேடித் தருவதையே நாம் நடைமுறையில் கண்டு வருகிறோம். ஆனால், இரு சாராரும் ஒரு 'இந்து' என்ற பட்டியில்தான் அடைக்கப்பட்டு இருக்கிறார்கள்!

இதேபோன்றுதான், இந்தி, தமிழ், ஆந்திரம் முதலிய பதினான்கு மொழிகள் 'தேசிய மொழிகள்' என அரசியல் சட்டத்தால் ஒப்புக்கொள்ளப்பட்டிருந்தபோதிலும், மற்ற மொழிகளுக்கு இல்லாத பெருமையும் செல்வாக்கும் இந்திக்கு, செயல் முறையில் இருப்பதைக் காண்கிறோம். இதற்கென்ன சமாதானம் கூறப்போகிறார்கள், காங்கிரஸ் அரசியல் பண்டிதர்கள்?

நிலச் சட்டம்

கொண்டு வருவதில் உள்ள சிக்கல்கள்

நிதி மந்திரி சுப்பிரமணியம் கூறும் காரணம்

"நிலச் சீர்திருத்தம் கொண்டு வருவதில் சில சிக்கல்கள் உள்ளன; அரசியல் சட்டத்தின் 31-ஏ பிரிவுக்கு திருத்தம் செய்திருந்தால், எல்லா நில உடைமைகளையும் கட்டுப்படுத்தியிருக்கலாம்; அரசியல் சட்டத்தின் 31-ஏ பிரிவின்படி, எஸ்டேட்டுகள் மட்டும்தான் கட்டுப்படுத்தப்படும் என்றும், இதர சொத்துக்கள் பாதிக்கப்படக் கூடாது என்றும் கூறப்பட்டது; அதுபோலவே திருத்தம் கொண்டு வரப்பட்டது;

"பம்பாய், ஐதராபாத் மாநிலங்களில் எப்படி நில வரம்பு நிர்ணயிக்கப்பட்டது — என்று சிலர் கேட்கக்கூடும்; அந்த மாநில சட்டங்கள் முன்பே இயற்றப்பட்டு விட்டன; இப்போது, 'அரசியல் திருத்தம் எஸ்டேட்டுகளுக்கு மட்டும்தான்' என்று கூறிவிட்டதால், சிக்கல் ஏற்பட்டது; இப்போது இதுபற்றி மத்திய சர்க்காரைக் கேட்டுள்ளோம்; அது, பரிசீலனையிலிருந்து வருகிறது; எனவேதான், இடைக் காலத்தில் நாம் ஒரு சட்டம் இயற்ற இருக்கிறோம்; இந்த இடைக் காலச் சட்டத்தைப் பற்றிக்கூட நாம் விவாதித்து முடிவு செய்ய முடியும்; அதற்கான காலம் தரப்படும்,"

என்று, நிலச் சட்டம் பற்றி நிதி மந்திரி சுப்பிரமணியம் சென்னை சட்டசபையில் குறிப்பிட்டிருக்கிறார்.

சீனாவில் கட்டுக்காவல் அதிகமாம்!

கொத்தலாவலை குற்றச்சாட்டு

"நான், சீனாவுக்குச் சென்றதில்லை; சீனாவுடன் ராஜீய உறவுகள் வைத்துக்கொள்வது எப்படியிருக்கும் என்று எனக்குத் தெரியாது; சீனா சென்று வந்த ஒரு வெளிநாட்டிலாகா அதிகாரி கூறியிருக்கிறபடி, சீனாவில் பாதுகாப்பு ஏற்பாடுகள் மிகக் கடுமையாக இருக்கின்றன; இதனால் ஒருவருக்கு மிகக் குறுகிய காலத்திலேயே சலிப்பு ஏற்பட்டுவிடுகிறது,"

என்று, இலங்கைப் பிரதமர் கொத்தலாவலை, இலங்கை மக்கள் சபையில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

அப்போது எதிர்க்கட்சியினர் பலர் குறுக்கிட்டுப் பேச முயன்றிருக்கின்றனர்.

"ஏன் நீங்கள் அதிர்ச்சியுற வேண்டும்? நான் என் மனதிற்குப்பட்டதைக் கூறினேன்; நான் சீனப் பிரதமரைச் சந்தித்தால் இதையே அவரிடம் கூறுவேன்,"

என்றும் கொத்தலாவலை குறிப்பிட்டிருக்கிறார்.

"இலங்கையை ஒரு சுதந்திர நாடாக ரஷ்யா ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை என்றால், இலங்கை ஏன் அவர்களுடன் 'ராஜீய' உறவுகள் வைத்துக்கொள்ள வேண்டும்?"

குண்டா அணைக்கட்டு திட்டம்

மத்திய சர்க்கார் 'கருணை' காட்டுகின்றனர்

இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில், நீலகிரி குண்டா அணைக்கட்டுத் திட்டத்தையும் சேர்த்துக்கொள்வதென மத்திய சர்க்கார் முடிவுக்கு வந்துள்ளதாகக் கூறப்படுகிறது.

இரண்டாண்டுகளுக்கு முன்னரே 'சர்வே', மதிப்பீடு முதலியன பூர்த்தியாகியிருக்க இந்தத் திட்டம், கூர்ஜர பகுதியின் பாராபோல் திட்டத்திற்கு அதிக முக்கியத்துவம் வேண்டுமென கூர்ஜர சர்க்காரால் கோரப்பட்டுவந்ததால், முடிவு எதும் செய்யப்படாமல் நிறுத்திவைக்கப்பட்டிருந்தது.

பாராபோல் திட்டத்திற்கு இன்னும் துவக்கக்கால மதிப்பீடு மேற்கொள்ளப்படவில்லை; அந்த 'சர்வே' முடிந்ததும், அதுவும் தனியாக மேற்கொள்ளப்படும் என்று கூறப்படுகிறது.

இதற்கிடையில், குண்டா திட்டத்தின் வேலைகள் தடைப்படாதெனவும், துவக்க வேலைகள் சீக்கிரமே மேற்கொள்ளப்படும் என்றும் தெரியவருகிறது.

இந்தத் திட்டத்தின்படி, வேறு வேறு இடங்களில் இரண்டு மின்சார உற்பத்தி நிலையங்கள் நிறுவப்படும் என்றும், இதற்கு சுமார் ரூ 21 65 கோடி செலவாகும் என்றும், இவற்றில் மொத்தம் 1,45,000 கிலோவாட் மின்சாரம் உற்பத்தியாகும் என்றும் கூறப்படுகிறது.

இந்தத் திட்டம், இரண்டு கட்டங்களாகப் பிரித்து நிறைவேற்றப்படும் என்றும் கூறப்படுகிறது

எல்லோருக்கும் வேலை தேடித் தருவதாக...

பம்பாய் முதன்மந்திரி உறுதிமொழி

பம்பாய் மாநிலத்தில் உள்ள வேலையற்றோர் எல்லோருக்கும் வேலை—அது, பற்றாக்குறை ஊதியம் கிடைக்கக்கூடிய வேலையாயினும்—தேடித் தருவதாக முதல் அமைச்சர் மொரார்ஜி தேசாய் குறிப்பிட்டிருக்கிறார்.

'அடுத்த ஆண்டு முதல் இதற்கான திட்டத்திற்கென வரவு—செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கப்படும்,' என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

'வேலையற்றிருப்போருக்கு வேலை தருவதற்கென, ஒரு குறிப்பிட்ட அளவு தொகை ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒதுக்கப்படும்,' என்றும் அவர் குறிப்பிட்டார்.

திட்டம் பற்றிய விவரங்கள் எதையும் அவர் கூறவில்லை; ஆனால், 'இனிமேலும், தங்களில் எவருக்கேனும் வேலை செய்ய வாய்ப்பு கிடைக்கவில்லை என்று, மக்கள் குற்றம் கூறுவதற்கு சர்க்கார் இடமளிக்காது,' என்று மட்டும் அவர் தெரிவித்திருக்கிறார்.

சட்டக் குழு நியமனம்

மக்கள் சபையில் அறிவிப்பு

இந்திய அட்டர்னி-ஜெனரல் எம். சி. செதல்வாட் தலைமையில் 11 உறுப்பினர்கள் கொண்ட சட்டக் குழு நியமிக்கப்பட்டிருப்பதாக சட்டமந்திரி சி. சி. பிஸ்வாஸ் மக்கள் சபையில் தெரிவித்தார்.

நீதி பரிபாலன முறையில் எல்லா அம்சங்களையும் பரிசீலித்து இதனை அபிவிருத்தி செய்வதற்கான வழிவகைகள் கூறவும், துரிதமாகவும், குறைந்த செலவில் நீதி வழங்க ஏற்பாடு செய்யவும், மத்திய சர்க்கார் சட்டங்களைப் பரிசீலித்து, அவைகளைத் திருத்தி, தொகுத்து, அல்லது இக்காலத்திற்கேற்றபடி ஆக்குவதுமே சட்டக் குழுவின் பரிசீலனைக்குரிய விஷயங்களாகும். இந்த ஆண்டு முடிய தற்போதைக்கு இந்தக் குழு நியமிக்கப்பட்டுள்ளது கமிஷனின் தலைமைக் காரியாலயம் புதுடில்லியில் இருக்கும்.

குமாஸ்தாக்களின் சம்பளத்தை உயர்த்த

சென்னை சர்க்காருக்கு விசாரணைக் குழுவின் சிபாரிசு

சென்னை, ஆக. 4—

"ரெவினியூ இலாகா, குமாஸ்தாக்களின் கூடாரமாக இருப்பதாகக் கூறப்படுகிறது. இந்தக் குற்றச்சாட்டு, எல்லா இடங்களிலும்கூட அல்ல — விரிவான ஓரளவு இடங்களில்கூடப் பொருந்தக்கூடியதாக இல்லை என்று நினைக்கிறோம்;

"குமாஸ்தாக்களை அமர்த்திக் கொள்ளும் முறையில் அல்ல, கோளாறு; மாறாக, அந்த இடங்களை நிரப்பும் நபர்களிடம் தான் கோளாறு உள்ளது,"

என்று, சர்க்கார் நியமித்த விசாரணைக் குழுவினர் தங்கள் அறிக்கையில் குறிப்பிட்டிருக்கின்றனர்.

'ரெவினியூ' இலாகா நடைமுறை பற்றி விசாரித்தறிய, சர்க்கார், கடந்த 1954-ல், ஒரு குழு நியமித்தனர்; அந்தக் குழுவின் அறிக்கை இப்போது, சட்டசபை முன்பு வைக்கப்பட்டிருக்கிறது.

"புதிய வேலை அம்சங்கள் எதுவும் ரெவினியூ இலாகாவுக்குத் தரப்படும்போதும், அதிகமான ஆட்கள் தேவை என்று முன்கூட்டியே தெரியும்போதும், 'அதிக நபர்கள் தேவை' என்று அனுமதி கேட்டால், சர்க்கார், உடனடியாக அனுமதி வழங்க வேண்டும்;

"மேலும், இன்னும் நல்ல நபர்களை இலாகாவிற்கு ஈர்க்கும் வண்ணம், கீழ்ப் பிரிவு குமாஸ்தாக்களின் அடிப்படைச் சம்பளம் உடனடியாக உயர்த்தப்பட வேண்டும். மத்திய சர்க்கார், மற்றும் தனிப்பட்ட அலுவலகங்களில் தரப்படும் சம்பள விகிதங்களைவிட சென்னை சர்க்கார் அலுவலக குமாஸ்தாக்களின் சம்பளம் மிகக் குறைவானதாயிருக்கிறது; இதனால், நல்ல தகுதியுடையவர்கள் இந்த மாநில சர்க்கார் உத்தியோகங்களுக்கு வரத் தயங்குகின்றனர்." என்றும், அந்த விசாரணைக் குழு கூறியிருக்கிறது

இந்தியக் குடி உரிமை மசோதா

கூட்டுக் குழு பரிசீலிக்கும்

புதுடில்லி, ஆக. 5—

குடி உரிமை மசோதாவை மக்கள் சபை உறுப்பினர்களில் 45 பேர்கள் அடங்கிய ஒரு கூட்டுக் குழுவின் பரிசீலனைக்கு விட வேண்டுமென்று உள்நாட்டு மந்திரி பண்டித பந்த் மக்கள் சபையில் ஒரு பிரேரபணை கொண்டுவந்து குறிப்பிட்டதாவது :—

"இந்தியாவில் பிறந்த எல்லோருக்கும்—அவர்களது தந்தையர் இந்தியப் பிரஜைகளாக இருந்தாலும் இல்லாவிட்டாலும் இந்த மசோதா குடி உரிமை வழங்குகிறது; குறைந்தபட்சம் 7 ஆண்டுகளேனும் இந்தியாவில் வசித்திருக்கும் அந்நியர்களுக்குக் குடிஉரிமை 'சர்டிபிகேட்' தரப்படும்; ஆனால், அவர்கள், இந்திய அரசியல் சட்டத்திற்கு விசுவாசம் தெரிவிக்க வேண்டும். மற்றும், இந்திய அரசியல் சட்டத்தில் குறித்துள்ள 14 மொழிகளில் ஏதேனும் ஒரு மொழி அவர்களுக்குத் தெரிந்திருக்க வேண்டும்.

"ஏதேனும் ஒரு பகுதி இந்தியாவில் சேர்க்கப்பட்டதும், அங்கு வசிக்கும் மக்கள் அப்படியே இந்திய குடிமக்களாகிவிடுகின்றனர்; விரைவில் கோவா மக்கள் இந்தியக் குடிமக்களாகிவிடுவதற்கும் சந்தர்ப்பம் ஏற்படும் என்றும் எண்ணுகிறேன்."

பீடிகளைத் தயாரிப்பதற்காகப் பயன்படுத்தப்படும் புகையிலை மீது, 1953—54-ம் ஆண்டில் மொத்தம் ரூ. 10,30,00,000-மும், 1954—55-ம் ஆண்டில் மொத்தம் ரூ. 9,25,00,000-மும் 'எக்சைஸ்' வரியாக வசூலிக்கப்பட்டதாம்!

கழகச் செய்திகள்

திருப்பூர் நகர தி. மு. க.

பொது உறுப்பினர்கள் கூட்டம்

31—7—55 காலை 11 மணிக்கு திருப்பூர் எல். எம். எஸ். நாதன் பனியன் பேக்டரியில், கோவை எஸ். ஏ. இராசமாணிக்கம் தலைமையில் நகர கழகப் பொதுப் உறுப்பினர்கள் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு ஈரோடு எஸ் அப்பாவு அவர்களும், மொத்த பொது உறுப்பினர்களில் 47 பேர்களும் வந்திருந்தனர்.

தனது தலைமையுரையில், தோழர் எஸ். ஏ இராசமாணிக்கம் தானும், எஸ். அப்பாவும் மாவட்டக் கழகச் செயலாளர் ஈ. வெ. கி சம்பத் அவர்களால் அனுப்பப்பட்ட காரணத்தை விளக்கினர்.

புதிய செயற்குழுவே தேர்ந்தெடுக்க வேண்டுமென எல்லா உறுப்பினர்களும் விரும்பியதால் தேர்தல் நடைபெற்றது.

தேர்தலுக்கு முன்பாக தோழர்கள் ஐ. எஸ். பாட்சா, கிரின், சேரலாதன், ஈரோடு தோழர் எஸ் அப்பாவு, ஈஸ்வரன் ஆகியோர் திருப்பூர் கழகத்தில் ஏற்பட்ட குறைபாடுகளையும், அதை நிவர்த்திக்கும் வழிவகைகளையும் கூறினர்.

தோழர்கள் முத்துரத்தினம் செயலாளராகவும், எம். என். அண்ணாமலை துணைச்செயலாளராகவும், தோழர் எஸ். எல். நடராசு பொருளாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

மாவட்டப் பிரதிநிதிகளாகத் தோழர்கள் எஸ் துரைசாமி, எல். எம். எஸ். நாதன், கே. பழனிசாமி ஆகியோரும், செயற்குழு உறுப்பினர்களாகத் தோழர்கள் கோவிந்தசாமி, கந்தசாமி, கே. எஸ் மணி, பாலசுந்தரம், டேனியல் பால், பால சுப்பிரமணியம், டி. நடராசன், சேரலாதன், எஸ். ஏ சண்முகம், கே. சுப்பிரமணியம், கே. நடராசன், மஹபூப், சொக்கப்பன், தனக்கோடி, கே. ஆறுமுகம் ஆகியவர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

இறுதியாக தோழர்கள் எஸ் ஏ. இராசமாணிக்கமும், எஸ். அப்பாவும் பேசிய பின் புதிய செயலாளர் அனைவருக்கும் நன்றி கூறினர்.

புதுவைப் பகுதியில் கழகத் தோற்றம்

31—7—55 காலை 10 மணிக்குப் புதுவைத் தி மு கழகச் செயற்குழு நடைபெற்றது. அதுபோது, செட்டப்பாக்கம் கொம்யூனைச் சேர்ந்த நத்தமேடு, புதுவைக்கடுத்த கோவிந்தசாலை இவ்விரண்டு ஊர்களிலுமுள்ள தி. மு. க. தோழர்கள் கிளைக் கழகங்கள் வேண்டி அனுப்பியிருந்த விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு சிற்றூர்க் கிளை அமைத்துக் கொள்ள அவ்வூர்க் தோழர்கட்கு அனுமதி அளிக்கப்பட்டது.

எட்டயபுரம் தி. மு. கழகம்

23—7—55 இரவு 8 மணிக்கு தோழர் என். எஸ் சுப்பையா கடையில் கழக உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் கூட்டம் நடைபெற்றபோது, கழக வளர்ச்சிக்கான முறைகள் பற்றி தோழர்கள் பலர் பேசியபின், நகரின் மத்திய பாகத்தில் மக்கள் கூடுமிடத்தில் நிற்கும் 7 கம்பங்களிலும் விரைவில் கழகக் கொடி உயர்த்தவும், மாநில மாநாட்டு 'கோட்டா' பணத்தை சில தினங்களில் அனுப்புவதெனவும், சிறப்புப் பொதுக்கூட்டம் ஒன்றிற்கு நிதி வசூலிக்க குழு ஒன்றை நியமித்தும் முடிவுகள் செய்யப்பட்டதுடன், 2-வது வார்டில் தண்ணீர் வசதிக்கு ஆவன செய்யுமாறு நகரசபையைக் கேட்டுக் கொண்டும், நகர சுகாதார நிலைக்கு ஆவன செய்யுமாறு சுகாதர அதிகாரியை வற்புறுத்தியும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

சென்னை—அயன்புரம் தி. மு. கழகம்

கழகச் செயற்குழுக் கூட்டம் மேட்டுத் தெரு, எண். 64 இல்லத்தில், தோழர் எம்.. முனுசாமி தலைமையில் நடைபெற்றபோது, மும்முனைப் போராட்டத்தில் உயிர் நீத்த தோழர்களுக்கு வீரவணக்கமும், சிறை சென்ற தோழர்களுக்கு பாராட்டும் தெரிவித்துக் கொண்டபின், செப்டம்பர் இறுதி வாரத்தில் பொதுக்கூட்டம் நடத்துவது என்றும், வரவு-செலவு கணக்குகள் ஏற்றுக்கொள்ளப்பட்டும் முடிவுகள் செய்யப்பட்டன.

ஆலந்தூர் தி. மு. கழகம்

31—7—55 காலை 11 மணிக்கு கழக இல்லத்தில், கழக செயற்குழுக் கூட்டம் தோழர் மு தங்கவேலு தலைமையில் நடைபெற்றபோது, 1955 மே, ஜூன் வரவு-செலவு கணக்குகள் ஒப்புக்கொள்ளப்பட்டதுடன், மும்முனைப் போராட்டத்தில் சிறை சென்ற தோழர்களுக்குப் பாராட்டும், போராட்டத்தில் உயிர் நீத்த தோழர்களுக்கு வீரவணக்கமும் செலுத்தப்பட்டது. பின்னர், துணைப் பொதுச் செயலாளராக என். வி. நடராசன் நியமிக்கப்பட்டதை வரவேற்றும், அவருக்குப் பாராட்டுதல் தெரிவித்துக்கொண்டும், செப்டம்பர் மாதத்தில் கழக ஆண்டு விழாப் பொதுக்கூட்டம் நடத்துவதெனவும் முடிவு செய்யப்பட்டது.

புஞ்சைத்தலையூர்

29—7—55 மாலை 6 மணிக்கு, தோழர் நைனா முகமது தலைமையில் நடைபெற்ற செயற் குழுக் கூட்டத்தில், மும்முனைப் போராட்டத்தில் சிறை சென்ற தோழர்களுக்கும், துப்பாக்கிப் பிரயோகத்தால் உயிர் நீத்த தோழர்களுக்கும் நன்றியும், வீரவணக்கமும் செலுத்தியபின், கழக வரவு-செலவுகள் ஒப்புக்கொள்ளப்பட்டது.

என்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

பொன்மலை— மேலக்கற்கண்டார் கோட்டை தி. மு. கழகம்

27—7—55 இரவு 7½ மணிக்கு கழக உறுப்பினர் கூட்டம் தோழர் மு. மாணிக்கம் தலைமையில் நடைபெற்றபோது, 30—6—55 முடிய உள்ள கழக வரவு-செலவு கணக்கு ஏற்றுக்கொள்ளப்பட்டும், தோழர்கள் ஆர். கே. சீனிவாசன், பி தங்கவேலு, என். கோவிந்தராஜன் ஆகிய மூவரையும் செயற்குழுவிற்கு அதிகமாக சேர்த்துக்கொண்டும், தோழர் சி. நாராயணன் விலகல் கடிதத்தை ஏற்றுக்கொண்டும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

திருத்தம்

12—7—55 'நம் நாடு' இதழில் வெளிவந்துள்ள மேற்படி கழகச் செய்தியிலுள்ள 'தோழர் ஏ சுந்தரத்தின் விலகல் கடிதம் ஏற்றுக்கொள்ளப்பட்டது,' என்பதைத் 'தோழர் சுந்தரம் செயற்குழு உறுப்பினர் பொறுப்பிலிருந்து விலகிக்கொண்டார்,' என்று திருத்தி வாசித்துக் கொள்ளக் கோருகிறோம்.

இலங்கை—கிராண்ட்பாஸ் தி. மு. கழகம்

31—7—55 மாலை 5 மணிக்கு கழகப் பணிமனையில் தோழர் இரா. அறிவுமணி தலைமையில் நடைபெற்ற உறுப்பினர்கள் கூட்டத்தில் இடைக்கால நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர் :— செயலாளர்: ஆர். ஆர். கே டேலர்; துணைச்செயலாளர்கள்: பி. எம் ஜலால், கே. எம். பரூக்; பொருளாளர்: எஸ். எஸ் மணி.

தி. மு. கழக மாநில மாநாட்டிற்கு பம்பாயின் பங்கு: ரூ. 555

சந்தை புதுப்பாளையம் தி. மு. கழகம்

2—8—55ல், அழகிரி படிப்பகத்தில், செயற்குழு உறுப்பினர் கூட்டம் நடைபெற்றபோது, மாநில மாநாட்டு நிதிக்காக ரூ. 100 அளிப்பதென முடிவு செய்யப்பட்டது.

கும்முடிபூண்டி தி. மு. க.

31—7—55ல் தோழர் ஏ. இராதாமணாளன் தலைமையில் நடைபெற்ற கழகப் பொதுக்குழுக் கூட்டத்தில், செயலாளர் ப செ. தூயமணி வைதீகத் திருமணம் செய்துகொண்டதையொட்டி, அவர் தந்த விலகல் கடிதத்தை வருத்தத்துடன் ஏற்றுக்கொள்ளப்பட்ட பின், தோழர் ஏ. இராதாமணாளனை செயலாளராகவும், தோழர் ச. சு. புவியரசுவை துணைச் செயலாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டது.

மும்முனைப் போராட்ட நினைவு நாள்

★

நீர்முள்ளிக்குட்டை

கழகச் சார்பில் மும்முனைப் போராட்ட நினைவு நாள் கொண்டாட்டம் தோழர் என். வி. வெங்கடாசலம் தலைமையில் நடைபெற்றது. தோழர் என். எம். முத்து பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் உருவப் படத்தையும், தோழர் என். ஆர். சந்திரன், அண்ணா படத்தையும் திறந்து வைத்தனர்; தோழர் என். ஏ கந்தசாமி கொடியேற்றி வைத்தார்; தோழர் என். ஏ. அங்கமுத்து தீண்டாமை ஒழிப்புச் சுவரொட்டியை இரண்டு கம்பங்களில் உயர்த்தினர்; பின்னர், ஆகஸ்டு இறுதிக்குள் ஆண்டு விழா நடத்துவதென முடிவு செய்யப்பட்ட பின், குழந்தைகளுக்கு இனிப்பு வழங்கப்பட்டது.

தூத்துக்குடி

17—7—55 இரவு 7 மணிக்கு, சந்தண மாரியம்மன் கோவில் திடலில், தோழர் ச. வெ. பாண்டியன் தலைமையில், மும்முனைப் போராட்ட நினைவு நாள் பொதுக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் கே. வி கே. சாமி, எம். எஸ். சிவசாமி, ஜோசப் ஆகியோர் மும்முனை போராட்டங்களை விளக்கியும், வருங்கால ஆக்க வேலை குறித்தும் விரிவுரையாற்றினர்.

பெயர் சூட்டு விழா

அக்கிப்பேட்டை தோழர் இ. இராமச்சந்திரன் அவர்களது ஆண் மகவுக்கு தோழர் இளஞ்சேரன் அவர்களால் "கருணாகரன்" எனப் பெயர் சூட்டப்பட்டது. இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ 1 அன்பளிப்பாகத் தரப்பட்டது—வரப் பெற்றோம்—நன்றி—பொறுப்பாளர்.

* * *

எண்ணூர் தி மு. கழகத் துணைச் செயலாளர் ரா. முத்துகிருஷ்ணன் அவர்களின் மகனுக்கு தோழர் இ. வி. சேதுலால் அவர்களால், 'ஆசைத்தம்பி' எனப் பெயரிடப்பட்டது; இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிப்பாகத் தரப்பட்டது — வரப்பெற்றோம்—நன்றி—பொறுப்பாளர்.

* * *

கோவை–இராமநாதபுரம் கிளைக் கழகத் தோழர் திரு. நடராசன் அவர்களது ஆண் மகவுக்கு, 3—8—55ல், தோழர் மு. மா சண்முகசுந்திரம் தலைமையில் பெயர் சூட்டு விழா நடைபெற்றது. குழந்தைக்கு "அன்பு" எனப் பெயரிடப்பட்டது. இதன் நினைவாக, 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ 1 அன்பளிப்பாகத் தரப்பட்டது—வரப்பெற்றோம்—நன்றி—பொறுப்பாளர்.

பம்பாய் தி. மு. கழக

தாராவி கிளை	ரூ. 174—5—0
பாண்டுப் கிளை	65—0—0
மாதுங்கா கிளை	50—0—0
காந்தவல்லி கிளை	40—0—0
அந்தேரி கிளை	30—0—0
தானா கிளை	25-12—0
கொலபா கிளை	25—0—0
தாராவி சௌந்திர பாண்டியனார் பகுத்தறிவுமன்றம்	10—0—0
,, மலாடு கிளை	5—7—6
தாராவி தாளமுத்து நடராசன் நினைவுப் படிப்பகம்	5—0—0
ப. தி. மு. கழக தலைமை நிலையம்	124—7—6
ஆகமொத்தம்	ரூ. 555—0—0

நெல்லை மாவட்டத்தில் அண்ணாதுரை

சுற்றுப்பயணம்

தோழர் சி. என். அண்ணாதுரை அவர்கள், நெல்லை மாவட்டத்தில் 16-8-55 முதல் 21-8-55 வரையில் ஆறு நாட்கள் சுற்றுப்பயணம் செய்வார்.

சுற்றுப்பயணத் திட்டத்தை நெல்லை மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் தோழர் கே. வி. கே. சாமி வகுத்துப் பின்னர் விவரமாக அறிவிப்பார்.

மாநில மாநாட்டு நிதி தந்து கூட்டம் அமைத்துக்கொள்ளும் தோழர்கள், தோழர் கே. வி. கே. சாமி அவர்களோடு தொடர்புகொள்ளவும்.

'அறிவகம்' சென்னை 28-7-55 — பொறுப்பாளர், தி.மு.க. தலைமைக் கழகம்

வண்ணை கே. எஸ். பாண்டியன் பகுத்தறிவுப் படிப்பகம்

சென்னை, ஆக. 4—

31—7—55ல், தோழர் எம். துரைசாமி தலைமையில் நடைபெற்ற படிப்பகச் செயற்குழுக் கூட்டத்தில், படிப்பகத்தின் நூல் நிலையப் பகுதி திறப்பதென முடிவு செய்யப்பட்டது.

பிரிவுபசாரம்

23—7—55 மாலை 6 மணியளவில், விருதுநகர் வி. வி. இராமசாமி படிப்பகத் துணைத் தலைவர் திரு. கு காளிமுத்து வெளியூருக்கு பணியாற்றப் போவதை முன்னிட்டு, படிப்பகத்தின் சார்பில், திரு. அருமைநாயகம் தலைமையில் ஓர் பிரிவு உபசாரம் அளிக்கப்பட்டது; தேநீர் விருந்துக்குப் பின், பலர் பாராட்டுரை வழங்கினர்.

திருத்தம்

2-8-55 'நம் நாடு' இதழ் 3-ம் பக்கத்தில், கழகச் செய்திகள் தலைப்பில் வெளியாகியுள்ள—'காங்கயம் தி. மு. கழகம்'—என்ற தலைப்பில் வெளிவந்துள்ள செய்தியை, 'காங்கயம் தி. மா. மு. கழகம்' என்ற தலைப்புடன் வாசிக்கக் கோருகிறோம்.

அனுதாபம்

1—8—55 இரவு 8 மணிக்கு, தோழர் வி. அருணாசலம் தலைமையில் நடைபெற்ற செங்காட்டுப்பட்டி தி. மு. கழகச் செயற்குழுக் கூட்டத்தில், தோழர் த. செ. பெருமான் அவர்கள் இயற்கை எய்தியமைக்கு அனுதாபம் தெரிவித்துக் கொள்ளப்பட்டது.

இந்தியாவில், கச்சா ரப்பர் அதிகமாக உற்பத்தியாவது திரு-கொச்சி மாநிலத்தில்தான். ரப்பர் தோட்டத்துக்கான மொத்த பிரதேச பரப்பளவில் சுமார் 85 சதவிகிதம் இந்த மாநிலத்திலுள்ளது.

திருவள்ளுவர் திருநாள்

★

தாமரங்கோட்டை

31—7—55 மாலை 5 மணிக்கு, சொற்பயிற்சிக் கழகச் சார்பில் திருவள்ளுவர் திருநாள் கொண்டாடப்பட்டது. ஊர்வலத்திற்குப் பின், தோழர் நா. வே. அப்பாதுரை தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில், தோழர் இராமகுழந்தை 'வள்ளுவம்' என்ற தலைப்பில் விரிவுரையாற்றினர்; கழக உறுப்பினர்கள் பலரும் பேசினர். பின்னர், எல்லோருக்கும் இனிப்பு வழங்கப்பட்டது.

சென்னை—அமைந்தகரை

31—7—55 காலை 10 மணிக்கு, அறிவு - இயக்க மன்றக் கட்டிடத்தில், திருவள்ளுவர் விழா, திரு. அ இளம்வழுதி தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் பலர் சொற்பொழிவாற்றினர். மாணவ, மாணவிகளுக்கு இனிப்பு வழங்கப்பட்டது.

குழித்தலை

31-7-55ல், குழித்தலை மதி-பாண்டியன் மன்ற ஆதரவில் டாக்டர் ஆ. வெங்கடாசலம் தலைமையில் திருவள்ளுவர் விழா நடைபெற்றது. ஆரம்பப் பள்ளி, உயர்தரப் பள்ளி, உயர்நிலைப் பள்ளி மாணவ—மாணவிகளின் குறள் ஒப்புவித்தல், சொற்பொழிவு, கட்டுரை போட்டி நடைபெற்று பரிசுகள் வழங்கப்பட்டது. பரிசுகளான புத்தகங்களைத்தனையும் தம் செலவில் தோழர் மீ. ச. இளமுருகு கொடுத்தார். தோழர்கள் ஆர். எ. பி. கிருஷ்ணன், பெரியசாமி, இளமுருகு மற்றும் பலர் 'திருக்குறள்' என்ற தலைப்பில் பேசினர். ஓவியர் தி. வீ. பாலு தீட்டிய திருக்குறள் சித்திரங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தது.

புதுக்கோட்டை

திருவள்ளுவர் நகரில், தமிழர் வாசகசாலையின் சார்பில், திருவள்ளுவர் திருநாள் 30—7—55 மாலை 7½ மணிக்கு, குன்றக்குடி அடிகளார் தலைமையில் நடைபெற்றது. தோழர் இராமகிருஷ்ணன் அனைவரையும் வரவேற்றார். தோழர்கள் வே. ஆறுமுகம், கோவை இளஞ்சேரன் ஆகியோர் பேசிய பின், தோழர் க. அன்பழகன் அவர்கள் விரிவுரையாற்றினர். பின்னர், இரு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

காரைக்குடி

31—7—55ல், வள்ளுவர் படிப்பகத்தில், தோழர் ச. ப. வள்ளன் தலைமையில் வள்ளுவர் விழா நடைபெற்றது. தோழர்கள் மெ. சீனிவாசன், பொ. துரை, மா. கிருட்டிணன், முத்துவேலு, சீ. மு. வெங்கிடாசலம், பழ. கருப்பன் ஆகியோர் பேசினர்.

* * *

வள்ளுவர் படிப்பகத் திறப்பு விழா

3—7—55ல், காரைக்குடி வ.வி. வீர. வீதியில், தோழர் துரை தலைமையில்; தோழர் பழ. கருப்பன் அவர்கள், மேற்படி படிப்பகத்தைத் திறந்துவைத்தார். பின்னர், படிப்பக நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

பம்பாய்—பாண்டுப்

3-8-55-ல், பாண்டுப் தி. மு. க. சொற் பயிற்சிக் குழு சார்பில், 'வள்ளுவர் திருநாள்' தோழர் தாசன் இல்லத்தில் கொண்டாடப்பட்டது.

பொறையாரில் அழகிரி படிப்பகம் அமைப்பு

3—8—55 மாலை 'அழகிரி படிப்பகம்' அமைப்புக் கூட்டம் தோழர் சி. ஜம்பு தலைமையில் நடைபெற்றபோது, தோழர் சி. ஜம்புவைத் தலைவராகக் கொண்ட ஒரு செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது. பின்னர், 20-8-55ல், படிப்பகத் துவக்க விழாப் பொதுக் கூட்டம் நடத்துவதென முடிவு செய்யப்பட்டது.

‘உரிய’ காலத்தில் ‘தக்க’ நடவடிக்கையாம்!

கேட்பதினுல் மட்டும் காரியம் நடக்காதாம்!

சேலம் இரும்பு உருக்குத் தொழிற்சாலை பற்றி மந்திரி பக்தவத்சலனுர் தகவல்

சென்னை, ஆக. 6—

சேலம் மாவட்டத்தில் ஒரு இரும்பு உருக்குத் தொழிற்சாலையை நிறுவும் பிரச்சினை கடந்த சில காலமாகவே சர்க்காரின் யோசனையில் இருந்து வருவதாகவும், அப்பிரச்சினையை நிபுணர்களைக் கொண்டு பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டதுடன், கூடுமானுல் மத்திய சர்க்காரின் நிர்வாகத்தின் கீழ் உள்ள திட்டங்களிலேயே இதையும் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று மத்திய சர்க்காரைக் கோரிக்கொண்டதாகவும், மத்திய சர்க்காரோ, பழுப்பு நிலக்கரிச் சுரங்கத்தை முழுமையுமாக பயன்படுத்த ஆரம்பித்த பின்னரே இந்தப் பிரச்சினையைக் கவனிக்க முடியும் என்று தெரிவித்துவிட்டனர் என்றும் சென்னை மாநில விவசாய அமைச்சர் பக்தவத்சலம் சட்டசபையில் தெரிவித்திருக்கிறுர்.

“எனவே, சேலம் மாவட்டத்தில் இரும்பு உருக்கும் தொழிற்சாலை நிறுவும் பிரச்சினை குறித்து உரிய காலத்தில் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்,”

என்றும் அவர் கூறியிருக்கிறுர்.

மேலும் அவர் பேசுகையில், இது விஷயத்தில் மத்திய சர்க்கார் மீது புகார் சொல்ல இடமே இல்லை என்றும், அத்தொழிற்சாலைக்குத் தேவையான முதலீடு குறித்துக் கஷ்டம் எதுவும் இல்லை என்றும், ஏனெனில் திட்டத்தை எடுத்துக் கொண்டால் முதலீடு கிடைத்துவிடும் என்றும், எனினும் உருக்குத் தொழிற்சாலையை அமைக்க நிலக்கரி அவசியமாக இருக்கிறது என்றும் அவர் குறிப்பிட்டிருக்கிறுர்.

“‘இதைச் செய்ய வேண்டும்; அதைச் செய்யவேண்டும்,’ என்று கேட்டுவிடுவதால்மட்டும் காரியம் நடந்துவிடாது,” என்றும் அவர் கூறியிருக்கிறுர்.

மணியம் கூறினுர்.

மக்கள் சபையில் கொண்டுவருவதற்கான நகல் மசோதா ஒன்றும் தயாராகிவிட்டதாக விவசாய அமைச்சர் பக்தவத்சலம் கூறியிருக்கிறுர்.

நகர சபைத் தேர்தல்

வாக்குப் பதிவு முறை

சென்னை, ஆக. 5—

“அக்டோபரில் நடைபெறவிருக்கும் நகரசபைத் தேர்தலில், கடந்த ஆண்டு மாவட்டக் கழகத் தேர்தலில் கையாளப்பட்ட வாக்குப் பதிவு முறையே (வாக்குச் சீட்டில் குறி போடுதல்) கையாளப்படும்,”

என்று, சட்டசபையில், கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் மந்திரி இராமசாமி படையாச்சி தெரிவித்திருக்கிறுர்.

இந்த முறைக்கு எதிர்ப்பு இருப்பதை சில உறுப்பினர்கள் சுட்டிக் காட்டி கேள்விகள் கேட்டபோது, ‘எல்லா விஷயங்களையும் சர்க்கார் நன்கு பரிசீலனை செய்து, இந்த முறையைவிட வேறு சிறந்த முறை இல்லாததால் இதையே கையாளுவதென முடிவுக்கு வந்தது,’ என்றும் மந்திரி தெரிவித்திருக்கிறுர்.

பரிசுப் போட்டிகள் கட்டுப்பாடு மசோதா

மக்கள் சபைக்கு அதிகாரம் அளிக்கும் பிரரேபனை

சென்னை மேல் சபையில் நிறைவேறியது

சென்னை, ஆக. 7—

பருத்தறிவுப் போட்டிகள் போன்ற பரிசுப் போட்டிகள் அனைத்தையும் கட்டுப்படுத்தி அவற்றை ஒழுங்குபடுத்துவதற்குத் தேவையான சட்டங்களை உருவாக்கும் அதிகாரத்தை, மக்கள் சபைக்குக் கொடுக்க, ஒருமனதாக சென்னை மேல் சபை ஒப்புதல் தந்துள்ளது.

லைசென்சு பெற்ற பரிசுப் போட்டிகளுக்கு உயர்ந்த பட்ச பரிசுத் தொகை ரூ. 1000 ஆகவும், லைசென்சு பெருத போட்டிகளுக்கு உயர்ந்த பட்ச பரிசுத் தொகை ரூ. 100 ஆகவும் கட்டுப்படுத்தவேண்டுமென்பதே சென்னை சர்க்காரின் கருத்து என்றும், இதனை மத்திய சர்க்காரும் ஒப்புக்கொள்ளலாம் என்றும் நிதி அமைச்சர் சுப்பிர

வாக்காளர் எண்ணிக்கை உயர்ந்துள்ளதாம்!

1952—54-ம் ஆண்டு காலத்தில் வாக்காளர் பட்டியலில் பதிவாகியுள்ள வாக்காளர்களின் எண்ணிக்கையில் உயர்வு ஏற்பட்டிருக்கிறதென்றும், மொத்தம் 88,69,216 பேர் அதிகமாகப் பதிவாகியுள்ளனர் என்றும் மத்திய சட்ட மந்திரி மக்கள் சபையில் கூறினுர்.

கே. எஸ். பாண்டியன் படிப்பக ஆண்டுவிழா

மாநில மாநாட்டு நிதிக்கு ரூ. 101 அளிக்கப்பட்டது

7–8–55 மாலை 5 மணிக்கு, திருவல்லிக்கேணி கடற்கரையில், திருவல்லிக்கேணி கே. எஸ். பாண்டியன் படிப்பகத்தின் இரண்டாம் ஆண்டு விழாப் பொதுக்கூட்டம் சிறப்புற நடைபெற்றது.

கூட்ட ஆரம்பத்தில் தோழர்கள் இரா. சண்முகம், க. தமிழன்பன், பூ. அரங்கசாமி ஆகியோர் இன்னிசை வழங்கினர்.

கூட்டத் துவக்கத்தில் படிப்பக பொறுப்பாளர் அவர்களால் படிப்பக ஆண்டறிக்கை வாசிக்கப்பட்டது.

பின்னர் தோழர் பாலு அவர்கள் முன்மொழிய தோழர் கணபதி அவர்கள் வழிமொழிய ‘நம் நாடு’ பொறுப்பாசிரியர் தோழர் காஞ்சி கல்யாணசுந்தரம் அவர்கள் கூட்டத்திற்கு தலைமை வகித்து அரிய தோர் உரை நிகழ்த்தினுர்.

தலைவர் முன்னுரைக்குப் பின் தோழர் கோகுல கிருட்டிணன் பி. ஏ., பி. எல்., அவர்கள் கழக இலட்சியங்கள் குறித்துப் பேசினுர்.

பின்னர், ஆரவாரப் பேரொலிக்கிடையே அண்ணு அவர்கள் நீண்டதோர் சிறப்புரை வழங்கினுர்.

தலைவர் முடிவுரை வழங்கிய தும் படிப்பக செயலாளர் தோழர் சண்பகவேல் நன்றி கூறினுர்.

கூட்டத்தில் உண்டியல் வசூல் மூலம் வசூலான ரூ 95—5—0-ம் படிப்பகம் ரூ 5—11—0-ம் சேர்த்து ரூ. 101, படிப்பகத்தின் சார்பில், தி. மு. கழக இரண்டாவது மாநில மாநாட்டிற்கென நன்கொடையாக சென்னை மாவட்ட செயலாளர் அவர்களிடம் தரப்பட்டது.

தென்னகம் தொழில் துறையில்...

[1-ம் பக்கத்தின் தொடர்ச்சி]

“தென்னகத்தை முன்னுளில் தொழில் துறையில் அலட்சியப்படுத்திவிட்டதை ஈடு செய்வதற்காக, இரண்டாவது திட்டத்தில் அதிகமான உதவியைச் செய்யுமாறு, திட்டக் குழுவிடம் சென்னை அரசாங்கம் பிடிவாதமாகப் போர் தொடுக்க வேண்டும். அந்தச் சிறப்புச் சலுகையைப் பெற சென்னைக்கு சிறப்பான காரணம் இருக்கிறது.”

“இன்றியமையாத மூலப் பொருட்கள் கிடைக்கும் பகுதிகளிலேயே, அப்பொருள் தொடர்புடைய தொழில்களைத் துவங்க வேண்டும் என்ற வழக்கை, பல நாடுகள் செயல் மூலம் பொய்யெனக் காட்டிவிட்டன.”

“வட்டார வாரியாகத் தொழில் ஏற்பாடு செய்வது என்பது, வடக்கிற்கு எதிராகத் தெற்கு என்ற பகுதிப்பற்றின் விளைவு அல்ல; நாட்டின் ஒவ்வொரு வட்டாரமும் ஒத்த முன்னேற்றம் அடைவது என்ற உயரிய கோட்பாட்டைக்கொண்டு எழுந்ததாகும்.”

“நூற்றுக்கணக்கான தொழில்களைத் துவங்குவதற்குத் தேவையான வசதிகள் சென்னை மாநிலத்தில் வரைகடந்து உள்ளன. ஒழுங்குபட நிர்வகிக்கும் சக்தியும் இங்கு ஏராளமாக இருக்கிறது. வாய்ப்பளிக்கும் பட்சத்தில், எந்த நிலைமையையும் நிர்வகிக்கவும், தலைதூக்கவும் அந்தந்தச் சக்தியால் இயலும்.”

தென்னிந்திய தேசிய சங்கம், பொது பொருள் குழு ஆகிய இரண்டின் சார்பிலும், மைலை சீனிவாச சாஸ்திரி மண்டபத்தில் பேசும்பொழுது, தொழிலதிபர் அனந்த ராமகிருஷ்ணன் அவர்கள் மேற்கண்டுள்ள கருத்துக்களைக் கூறியுள்ளார்.

மலேரியா தடுப்பு

வீடுகளில் டி. டி. டி. தெளிக்கப்படுகிறது

சென்னை, ஆக. 7—

மலேரியா தடுப்புத் திட்டத்தின் ஒருபகுதியாக வீடுகளில் டி. டி. டி மருந்து தெளிக்கும் வேலை, கடந்த ஜூலை 27-ந்தேதி முதல் சென்னை ஸ்டான்லி நகர் பகுதியில் (7-வது வட்டம்) துவங்கியிருக்கிறது.

புதுடில்லி, ஆக 7—

உதவி மந்திரியாகவிருக்கும் நித்தியானந்த கனுங்கோ மத்திய சர்க்கார் தொழில் இலாகா மந்திரியாக நியமிக்கப்பட்டிருக்கிறுர் என்று தெரிகிறது.

தொடர்ந்து அவர் வர்த்தக தொழில் இலாகாவுடனும் இணைந்திருப்பார் என்றும் கூறப்படுகிறது.

விழிப்படைந்துள்ள...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பதை மறுக்க முடியாது; அவர்களுடைய உள்ளக் கிளர்ச்சியும் பிரமாதமான நிலையில் இருக்கிறது; அவர்களுடைய பிரச்சினைகள், நம்முடைய பிரச்சினைகளிலிருந்து மாறுபட்டிருக்கலாம்; ஆனுல், ஆப்பிரிக்கா முழுவதிலும் ஒரு எழுச்சி ஏற்பட்டிருக்கிறது என்பதை, எவரும் மறுக்க முடியாது.

“ஆப்பிரிக்கப் பிரச்சினை, வருங்காலத்தில் எவ்வாறு உருவாகுமென்பதை இப்பொழுது என்னுல் கூற முடியாது; ஆனுல், இப்பிரச்சினை சுமூகமாகத் தீர்க்கப்படாவிட்டால், இது, இனப்போரில் கொண்டுபோய் விடுமென்பது மட்டும் நிச்சயமாகும் என்று எச்சரிக்க விரும்புகிறேன்,”

என்று, பிரதமர் நேரு, டில்லி சர்வகலாசாலையில், ஆப்பிரிக்கா பற்றிய படிப்புக்கான இலாகாவைத் துவக்கிவைத்து பேசுகையில் குறிப்பிட்டுள்ளார்.

‘மாறுதலடைந்து வரும் காலத்தில் பழைமை வழக்கங்கள் நிலைக்காது’

பொருத்தமற்ற சமுதாய முறைபற்றி பண்டிதர்

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 3 புதிய இரும்பு உருக்குத் தொழிற்சாலைகளை ஆரம்பிக்கத் தீர்மானித்திருப்பதாயும், அவை அனைத்தும் சர்க்கார் பொறுப்பில் உள்ள தொழிற்சாலைகளாகத்தான் இருக்குமேயன்றி தனிப்பட்டோர் தொழில் முயற்சியுடன் சம்பந்தப்பட்டதாக இருக்காது என்றும் இந்தியப் பிரதமர் நேரு, இலக்கு மணபுரியில் நடைபெற்ற ஒரு பொதுக்கூட்டத்தில் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் குறித்துப் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறுர்.

“சோஷலிச பாணி சமுதாயத்தை உருவாக்குவதின் மூலம் நாட்டில் பொருளாதார மாறுதலைக் கொண்டுவரத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. இந்த மாறுதலை இந்தியா தனது சொந்த முறையிலேயே உண்டாக்குமேயன்றி, வேறு எந்த நாட்டையும் பார்த்து ‘காப்பி’ அடிக்காது; இந்தியா, மற்ற நாடுகளைப் பார்த்து முறைகளைக் கற்றுக்கொள்ளும்; ஆனுல் அப்படியே பின்பற்ருது” என்றும் அவர் கூறியுள்ளார்.

“குறிப்பாக இந்த நாட்டிலுள்ள இந்து மதத்தவரும், மற்ற வகுப்பினர்களும் கையாண்டு வரும் நைந்துபோன—பழைய சமுதாயப் பழக்க வழக்கங்களைக் கைவிட வேண்டும்,” என்றும் அவர் அக்கூட்டத்திலேயே கேட்டுக்கொண்டுள்ளார்.

“பழைமையானவை எல்லாம் நல்லவைதான் என்று கூறிவிடுவது சரியாகாது; ஏனெனில், தற்கால உலகில் மிகமிக விரைவாக மாறுதல்கள் ஏற்பட்டுக் கொண்டே வருகின்றன; காலத்திற்கொவ்வாத வழக்கங்கள் சில தற்போதுள்ள நிலைமைக்குக் கொஞ்சமும் பொருந்தாதவை; சோஷலிசத் தன்மையுடன்கூடிய சமுதாயமும், சாதி முறையும் ஒன்றுக்கொன்று பொருத்தமற்றவைகளாகும்,” என்றும் அவர் மேலும் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறுர்.

பாக். பிரதமர் முகமது அலி

பதவியிலிருந்து விலகினுர்

கராச்சி, அக். 7—

பாகிஸ்தான் பிரதமர் முகமது அலி தனது பதவியை இராஜினுமாச் செய்துவிட்டாரென அறிவிக்கப்பட்டுள்ளது.

பாக். அரசியல் நிர்ணய சபைக்கான அமைப்பு வேலைகளைத் தம் முடிவு பெற்றுவிட்டதால், அரசியல் நேர்மைப்படி, பிரதமர் தமது பதவி விலகலை தற்போதைய கவர்னர் - ஜெனரலிடம் கொடுத்துள்ளார். அடுத்த புதிய அமைச்சரவை அமையுங்காலம் வரை பிரதமர் பதவியில் இருந்து வருமாறு முகமது அலியை கவர்னர்-ஜெனரல் கேட்டுக்கொண்டுள்ளார் என்று பாகிஸ்தான் அமைச்சரவைக் காரியாலயத்தின் அறிக்கை ஒன்றின் மூலம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

முஸ்லீம் லீக் கட்சித் தலைவர்

பாகிஸ்தான் நிதி அமைச்சர் சௌத்ரி முகமது அலி அரசியல் நிர்ணய சபையிலுள்ள முஸ்லீம் லீக் கட்சியின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளாராம்; யூசப் ஹாருன் என்பவர் அ. நி. சபை முஸ்லீம் கட்சிச் செயலாளராளுராம்.

அரசியல் நிர்ணய சபை முஸ்லீம் லீக் கட்சியின் கூட்டம் ஆரம்பித்த சிறிது நேரத்திற்கெல்லாம் பிரதமர் முகமது அலி கூட்டத்தை விட்டு வெளியேறியதாகவும், நிருபர்கள் அவரை, திரும்பவும் கூட்டத்திற்கு வருவாரா எனக் கேட்ட போது, விருப்பு-வெறுப்பு இல்லாமல், அமைதியாகவும், நிதான புத்தியுடனும் கட்சித் தலைவரைத் தேர்ந்தெடுக்கவும், கூட்டு மந்திரி சபை பற்றி தீர்மானிக்கவும் வசதி செய்யும் பொருட்டே தாம் கூட்டத்தைவிட்டுப் போவதாகவும் கூறினுர்.

முஸ்லீம் லீக்— அவாமி லீக் கூட்டு

அவாமி லீக் கட்சியுடன் கூட்டுச் சேருவது என்று முஸ்லீம் லீக் கட்சி தீர்மானித்துள்ளதாம். அவாமி லீகில் 12 உறுப்பினர்கள் உள்ளனர். முஸ்லீம் லீக்—அவாமி லீக் கூட்டுச் சேருவது பற்றிய பேச்சுவார்த்தைகள் ஆரம்பித்துவிட்டன என்றும் தெரியவருகிறது.

அடுத்த பிரதமர் ?

பெரும்பாலும் பாகிஸ்தானின் புதிய பிரதமராக சுஹ்ரவர்த்தி வரக்கூடும் என்று கூறப்பட்டிருக்கிறது.

80 உறுப்பினர்களைக் கொண்ட பாக். அரசியல் நிர்ணயசபையில் 47 பேர் அவாமி—முஸ்லீம் லீக் கூட்டுக் கட்சியினர் இருப்பர் என்றும் தெரிகிறது.

பதவி ஏற்ருர்

பாகிஸ்தானின் தற்காலிகக் கவர்னர்-ஜெனரலாக மேஜர்-ஜெனரல் இஸ்கந்தர் மிர்சா பதவியேற்றுள்ளார் என தெரியவருகிறது.

கழகக் கூட்டம்

★

திருமுக்கூடல்

அழகிரி மேடையில்

10—8—55 மாலை 6 மணிக்கு

தலைவர் : ந. தருமராசன்

பேசுவோர் :

சி. பி. சிற்றரசு

ராசவேல்

விசயன்

சட்டக் குழு நியமனம்

தென்னுட்டுப் பிரதிநிதிகளாக திராவிட வழக்கறிஞர்கள் கிடைக்கவில்லையா ?

தலைவர் எம். சி. செதல்வாட் (இந்திய அட்டர்னி ஜெனரல்) எம். சி சாக்லா (பம்பாய் உயர்நீதி மன்ற பிரதம நீதிபதி), கே. என். வாஞ்சு (இராஜஸ்தான் உயர்நீதி மன்ற பிரதம நீதிபதி), ஜி. என். தாஸ் (கல்கத்தா நீதிமன்ற ஓய்வு பெற்ற நீதிபதி), பி. சத்திய நாராயண ராவ் (சென்னை உயர் நீதிமன்ற ஓய்வு பெற்ற நீதிபதி), டாக்டர் என். சி. சென்குப்தா (அட்வொகேட், கல்கத்தா), வி.கே. திருவேங்கடாச்சாரி (சென்னை அட்வொகேட்-ஜெனரல்), நரசராஜு (ஆந்திர அட்வொகேட்-ஜெனரல்), எஸ். எம். சிக்கி (பஞ்சாப் அட்வொகேட்-ஜெனரல்), ஜி. எஸ். பதக் (அட்வொகேட்-ஜெனரல் அலகாபாத்), ஜி என். ஜோஷி (அட்வொகேட் பம்பாய்).

(விவரங்கள் 2-ம் பக்கம் பார்க்க)

இந்தியாவில் ஆண்டு தோறும் சுமார் 1,40,000 பவுண்டு கொயினு உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர் : இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.